O,IC5 : 316

உ

கடவுள் துணை.

சோழவந்தானூர்,

அரசஞ்சண்முகனார்

இயற்றிய

திருக்குறட்

சண்முகவிருத்தியுள்

முதற்குறள் விருத்தி.

இது

மதுரைத்

தமிழ்ச் சங்கம்

தலைவராகிய

சுந்தரபாண்டிய ஓதுவாரால்

கையெழுத்துப் பிரதிகளைக்கொண்டு

பரிசோதித்து,

டை சங்கத்தின்

MARIMALAI

எ-வது புத்தகமாக

மதுரை

மீனலோசனி அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

விலை] **1921.** [அணா 5.

(Copyright Registered.)

முகவுரை.

மதுரையை அடுத்துள்ள சோழவந்தானூர் அரசஞ்சண்முகனை ரென்பார் இலக்கண இலக்கியங்களில் ஆற்றன்மிக்கபெரும்புலவ ராய்த் தமிழ்மக்கள் போற்றவிருந்து ஏழாண்டின் முன்னர்க் காலஞ் சென்றமையை இற்றைக்கும் தமிழுலகம் நன்கறியும். இவர் சுத்தநி கணிகளாலாயநூல்களை எளிதிலியற்றுவதினும், கேட்போருவப்பவப் பொருளையும் அவையிடைத் தெளிய விளம்புவதினும், எழுதுவதி னும் போற்றலுடையராய் விளங்கினரென்பதை நேரேயறிந்துள்ள தமிழ்ப்புலவர்களிற் பலர் இப்போது மிருந்து வருகின்றனர்.

இவரியற்றியநூல்களில் "மாலைமாற்றுமாலை" "இன்னிசையி ருநூறு" "தொல்காப்பியப்பாயிரவிருத்தி" மீனாக்ஷியம்மைமீது "சந்தத்

திருவடிமாலை" "வள்ளுவர்நேரிசை" ஆகியதூல்கள் முன்னரே வெளிவந்துள்ளன.

"தொல்காப்பிய நூன்மரபுவிருத்தி" "ஷை எழுத்துவிருத்தி" "திருக்குறட் சண்முகவிருத்தி" "ஏகபாதநூற்றந்தாதி," "நவமணிக் காரிகை நிகண்டு" ஆகிய நூல்கள் இனிவெளிவரவேண்டுவனவாய் ஆசிரியர் அரசஞ்சண்முகனார் உடன் பிறந்தாரும் எனது நண்பரு மாகிய திருவாளர் அ. இராமசாமிப் பிள்ளையவர்களிடத்தும் என்னி டத்தும் இருந்து வருகின்றன.

"திருக்குறளாராய்ச்சி" என்ற தலைப்பெயரிட்டு மதுரைத் தமிழ்ச்சங்கம செந்தமிழ்ப் பத்திரிகையில் சிலகுறட்பாக்கள் வெளி வந்துள்ளன. அவ்வரியவிஷயங்கள் ஆசிரியரியற்றிய விருத்தியுணின்று அக்காலத்தே எடுத்தெழுதப்பட்டனவேயாம். அவற்றுள் முதற்குற ளாராய்ச்சியும் ஒன்றாகுமென்பதை யாவருமறிவர்.

இப்பொழுது திருக்குறட் சண்முக விருத்தியுள் முதற் குறள்விருத்தியாகிய இப்புத்தகம் பேருரைகாணும் வேட்கையுற் றார்தங்கருத்தின்படி எனது நண்பரான மேற் கூறிய பிள்ளையவர்கள் பாலிருந்து கிடைக்கப்பெற்ற பிரதிகளிரண்டையும் பெற்று எனது பிரதிபோடு ஒப்பிட்டுப் பார்த்து அவற்றுள் அடிக்கும் வரிப்பிளக்

முகவுரை.

தொழுதியுமுள்ள இடங்கள் தோறும் இயன்றவரை சோதித்து உள்ளவாறு அச்சிட்டு வெளியிடப் பெற்றுள்ளது.

திருக்குறட்சண்முகவிருத்தியுட்கண்ட இம் முதற்குறள் விருத்தி; பரிமேலழகர் உரையினைக்காண்டிகையாக்கொண்டு அவ்வுரையுட் பொருந்தாத்தனமறுந்த வினையவற்றோடு வேண்டிய அளவில் விரிப்பனவிரித்து வெளிவாப்பெற்றுள்ளது. திருக்குறள் நூலுக்கு "திருவள்ளுவமாலை" சிறப்புப்பாயிரமாதலிற் பாயிரவியலுண்முதலாவது அதிகாரம் கடவுள் வாழ்த்து முதற்குறளின் பின்னர் விளங்கவைத்துள்ளது. இன்னிலை, நாறாவிலை யெனத் தமிழ்நான்முறையிலங்க விளங்கும் முப்பாலி னூற்பாவினொழிந்த இந்நூலின் முதற்குறட்பாவிற்கு ஆசிரியர் ஸர்வஜனமுகனை இயையக்கூறிய அகரமாகிய அகத்திணைகளும் காதலிவாழிடமாடு அதிபகவனிலகணமும் பிறவும் ஊன்றியுணரவல்லவரெவரும் பேருரையாசிரியராதற்கிலியாதாற்றலி வியந்து பாராட்டாமலிரார் என்பது யான்கொண்ட துணிபு.

திருக்குறள் நூலுக்கு இந்நாளையப் பேருரைநூலொன்று இதுகாறும் வெளிவந்ததில்லை; அகலின இவ்வுரைநூலோடு ஆசிரியரியற்றிய எல்லாநூல்களும் வெளிவருமாயின் முதற்குறள் விருத்தியைக் கண்ணுறும் நீங்கள இயன்ற உதவிபுரியுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிப்பில் கோந்த வழுக்களை எனது மறதிமுதலியவற்றால் நேர்ந்தன வென்று கருதிப பொறுத்தருளுமாறு அனபாகவே வேண்டிக்கொள்கின்றனன்.

ஆசிரியரியற்றிய "மகபாத நூற்றந்தாதி" என்னும் அரிய அந்தாதிநூல் உரையுடன் விரைவில் வெளிவரும்.

இங்ஙனம்

மு. சுந்தரபாண்டிய ஓதுவார்,
தலைவர், தமிழ்ச்சங்கம்

மதுரை
தண்மதிவரு
ஆவணிமீ
கூட

அரசஞ் சண்முகனார்

வரலாறு.

இம் முதற்குறள்விருத்தி யுரையாசிரியராகிய அரசஞ்சண் முகனார் தமிழ்வள நாட்டின் றலை நகராகிய மதுரைக்கணிகதாயுள்ள சோழவந்தானூரில், வேளாளர்மரபில், அரசபாபபிள்ளை யென்பார் பால், (கி. பி. 1867.) விபவவரு டத்தோன்றியவர். இவர், இளம்பிராயத் திலே தமிழ் மொழியில் ஆர்வமிகருடையவராய், அவ்வூர்க்கிண்ணி மங்கலமடாலயம், அருளானந்தசுவாமிகள் பரம்பரையில வந்தருளிய சிவப்பிரகாசசுவாமிகள் பால், இலக்கணம், இலக்கியம், தருக்கம், சோதிடம முதலியவற்றை யுணர்ந்து, "சண்முகம் பிள்ளை" என்னும் பிள்ளைத் திருநாமமுடையவராய் விளங்கி வந்தனர்.

இவர், முருகக்கடவுளிடத்தும், அம்பிகையிடத்தும், பொதுமையாக அன்பேரிடத்தும் மெய்யன்புடையவாயிருந்து வந்தனர். தமது இளம்பருவத்திற் கல்விகற்றுக் கொண்டிருந்த பொழுதே முருகக்கடவுண்மாட்டு மாலுமாற்று மாலை, எகபாதநூற்றந்தாதியுண்முதன்முப்பது பாட்டு ஆகிய நூல்களைக் கேட்போர் வியப்ப இயற்றுவாயினர்.

இவரது சிறுபருவத்திலே, தந்தையார் உயிர் துறந்தமையால், குடும்ப பாரத்தை மேற்கொண்டு, 21-ஆம் வயதில் மதுரையையடைந்து, சேதுபதி ஆங்கில உயர்தர கலாசாலைத் தமிழ்ப் புலவராய்ப், பன்னிராண்டு இருந்து வந்தனர். அப்போது தமக்குக் கிடைத்த காலத்தை ஒருசிறிதேனும் அவமாகப் போக்காது பயில்வார்க்கினிய செஞ்சொலும் பொருளும் சுவையொடு தழும்ப இன்னிசைஇருநூறு, வள்ளுவர் கோரிசை, மதுரைச் சிலேடை ஆகிய சிறந்த நூல்களை இயற்றி உதவினர். பின்னர், "நவமணிக்காரிகை நிகண்டு," என்ற நூலொன்றினைக் கலித்துறைப்பாட்டால், இலக்கிய நூலுட்புகுவார்க் குறுதுணையாமாறு இயற்றிமுடிப்பான் கருதி, மக்கட் பெயர்த் தொகுதிகாறும் அமைத்து வைத்துள்ளார்.

பின்பு மதுரைத் தமிழ்ச் சங்கத்தில், தமிழ்ப் புலவராயிருந்து 4-வருடம் நூலாராய்தன் முதலிய பணிபுரிந்து, சங்கத்தை விட்டு நீங்

நாசஞ் சண்முகனார் வரலாறு.

பிப், பிறப்பிடமாகிய சோழவந்தானிலே யிடமாக் கொண்டு, தமிழ

கத்தினுயிர்நாடிபோன்ற தொல்காப்பியம், திருக்குறள் ஆகிய இலக்கண இலக்கிய நூலிரண்டினையும் கன்காராய்ந்து, அவற்றுட் கிடக்கும் நுண்ணிதாயுரிய பெரிய உண்மைகளைக் கண்டறிந்து திரட்டுவதையே கருத்தாக் கொண்டு விடாது முயன்று வந்தார். ஆன்றோர் நூலுட் புதைந்து கிடக்கும் அரியவற்றைக் கண்டெடுத்தல் யார்க்கும் எளிதல்லவாகலான், அவ்வுழைப்பில் உடம்புமிக மெலிந்து, வாத நோயாளிடர்ப்பட்டு, படுத்த படுக்கையாக வருந்துவாராயினர்.

இங்ஙனம் வருந்தும் ஓர் நாள் வைகறையிற் பக்கத்தொரு வரு மில்லாத வேளையில், ஒருபெரியவர் தம்முன்னேன்றி "எழுந்திரு" என்றவுடனே எழுந்துநின்று, அப்பெரியவாடிச் சுவட்டைப் பின்பற்றி, ஊர்கடந்து வையையாற்றின் றென்கரையேறி, சுமார் அரைக்காதவூரத்திற் காணப்பெறும் நாகமலையையடைந்து உச்சியிற்போய்ச் சேர்ந்தனர். முன்செல்கின்ற பெரியார், இவரை நோக்கி நின்று கொண்டு "உடலுக்குமருந்துவேண்டுமா? உயிருக்குமருந்து வேண்டுமா?"என்று கேட்டனர்;"உயிருக்குமருந்துவேண்டும்"என்று கூறிய வளவிலே அம்மலைச்சாரலின் ஓர்பாலிலங்கும் தாமரையூற்றின் பக்கல் அழைத்துவந்து, கடைக்கணித்தருளி, விட்டு விட்டேகினார்.

இதனையறியாத இல்லத்திலுள்ளார், நோய்வாய்ப்பட்டுப் படுக்கையிற் கிடந்தாரைக் காணுதையுற்று மயங்கிப்பக்கத்திலுள்ளார்க்குரைப்ப, ஊரறிந்தமையால், அவர்மாட்டன்புடைய அனைவரும் திரண்டு தேடிக்காணுது, மலையையடுத்துள்ள "நாரணபுரம்" என்னும் ஊரிலுள்ளார், மேற்கூறிய ஊற்றின் பக்கலிருக்கு மவரைக்காட்டக் கண்டு, நிகழ்ந்தவற்றைக் கேட்டுப் பெரு வியப்பெய்தினர்கள். அன்

முழுதல், கோயொன்று மிலாத, கல்லுடம்பினராய், மூன்றுகாலச் செய்தியையும் எவரும் மலைப்பெய்த 6-மாசகாலம் விளம்பிவந்தனர். இதனைய பல அதிசயங்கள் ஊர்க்கண்ணும், அம்மலைக்கண்ணும், இவர்பொருட்டாக நிகழ்ந்தவற்றை நேரே கண்டறிந்தாரிற் பலர் சேரமான்தாணரிடை இப்பொழுது முளாகலான் அவர்பாற் கேட்டறிந்து தொள்ளாயிரம்.

அரசஞ் சண்முகனார் வரலாறு.

மெளியார் கடைக்கணித்தருளிய பின்புதான், தொல்காப்பியப்பாயிர விருத்தி, நான்மாடமுரித்தி, (40 அதிகாரமுடிய) திருக்குறட் சண்முகவிருத்தி ஆகிய பேருரைநூல்களை இயற்றுவாராயினர். கடைசியாக, மீனாக்ஷியம்மை மீது "சந்தத்திருவடிமாலை" என்னும் முப்பத்திரண்டு சந்த விருத்தங்களாற் புனைந்த பாமாலையொன்றியற்றித்தமிழகம் போற்ற வீற்றிருந்து, 47ம் வயதில், சிவபெருமானது திருவடி நீழலில் இரண்டறக்கலந்துய்ந்தனர். இவர்புகழ்என்றும் நிலவுக.

அவையடக்கம்.

கல்லான் வளையிலுங் தெய்வந்தனைக் காதலில்லார்
நல்லார் பணிவார் பணியார் பொருளுடல் செய்யார்
வல்லார் மதியின் மொழியாயினும் வைப வேமான்

சொல்லா ரிசையாற் றலைக்கொள்ப வென்சொல்லு மேலார்.

திருக்குறட்சண்முக விருத்தியுண்

முதற்குறள் விருத்தி.

திருக்குறள்.

அறத்துப்பால்

பாயிரவியல்

முதலாவது அதிகாரம்.

கடவுள் வாழ்த்து.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

என்பது முதற்பாட்டு.

இந்நூற்குப் பரிமேலழகர் உரையினைக் காண்டிகையாகக் கொண்டு விருத்தி யெழுதப்படும்.

திருவள்ளுவர்குறள்.

அறத்துப்பால்.

உரைப்பாயிரம்.

இந்திரன் முதலிய இறையவர்பதங்களும் அந்தமிலின்பத் தழிவில் வீடும் நெறியறிந்தெய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரா லெடுக்கப்பட்ட பொருள் நான்கு: அவை அறம், பொருள், இன்பம்,

வீடென்பன. அவற்றுள், வீடென்பது சிற்றையுமொழியுஞ் செல்லா நிலைமைத்தாகலின், துறவறமாகிய காரண வகையாற் கூறப்படுவதல்லது இலக்கணவகையாற் கூறப்படாமையின், நூல்களாற் கூறப்படுவன எனை மூன்றுமேயாம்.

அவற்றுள், அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழித்தலுமாம். அஃது ஒழுக்கம் வழக்குத் தண்டமென மூவகைப்படும்.

அவற்றுள், ஒழுக்கமாவது அத்தணர்முதலிய வருணத்தார்தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று அவ்வவற்றிற் கோதிய அறங்களின் வழுவா தொழுகுதல்.

வழக்காவது ஒருபொருளேத்தனித்தனியே எனதெனதென்றிருப்பார் அதுகாரணமாகத் தம்முண்மாறுபட்டு அப்பொருண்மேற் சொல்வது. அது கடன் கோடன் முதற் பதினெட்டுப் பதத்ததாம்.

தண்டமாவது அவ்வொழுக்கநெறியினும் வழக்குநெறியினும் வழீஇ யினுரை அந்நெறி நிறுத்தற் பொருட்டு ஒப்ப நாடி அதற்குத்தகவொறுத்தல்.

இவற்றுள் வழக்குந்தண்டமும் உலகநெறி நிறுத்தற்பயத்தவாவதல்லது ஒழுக்கம்போல் மக்களுயிர்க்கு உறுதிபயத்தற்சிறப்பிலவாகலானும், அவை தாம் நூலானேயன்றி உணர்வுமிகுதியானுந் தேயவியற்கையானும் அறியப் படுதலானும் அவற்றையொழித்து ஈண்டுத் தெய்வப்புலமைத் திருவள்ளுவ ராற் சிறப்புடைய ஒழுக்கமே அறமெனவெடுத்துக்கொள்ளப்பட்டது.

அதுதான் நால்வகை நிலைத்தாய் வருணந்தோறும் வேறுபாடெமை யின், பிறபான்மையாகிய அச்சிறப்பியல்புகளொழித்து, எல்லார்க்கு மொத் தவிற் பெரும்பான்மையாகியபொதுவியல்புபற்றி இல்லறந் துறவறமென இருவகைநிலையாற் கூறப்பட்டது.

அவற்றுள் இல்லறமாவது இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லுகின்ற நெறிக்கணின்று அதற்குத் துணையாகிய கற்புடைமனைவியோடுஞ் செய்யப் படுவதாகலின், அதனை முதற்கட் கூறுவான்றொடங்கி எடுத்துக்கொண்ட இலக்கிய மினிதுமுடித்தற்பொருட்டுக் கடவுள்வாழ்த்துக் கூறுகின்றார்.

முதற்குறள் விருத்தி.

முதலாவது அதிகாரம்; கடவுள் வாழ்த்து.

அஃதாவது கவி தான் வழிபடுகடவுளையாதல் எடுத்துக்கொண்ட பொருட்கு ஏற்புடைக்கடவுளையாதல் வாழ்த்துதல், அவற்றுள் இவ்வாழ்த்து ஏற்புடைக்கடவுளெனவறிக. என்னை? சத்துவமுதலிய குணங்களான்

மூன்றுமிய உறுதிப்பொருட்கு அவற்றுன் மூவாகிய முதற்கடவுளோடு இயைபுண்டாகலான். அம்மூன்றுபொருளையுங் கூறலுற்றுர்க்கு அம்மூவரையும் வாழ்த்துதல் முறைமையாகலின் இவ்வாழ்த்து அம்மூவர்க்கும் பொதுப்படக் கூறினரெனவுணர்க.

அக்ர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

இதன்பொருள்:—எழுத்தெல்லாம் அகர முதல-எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலே உடையன. உலகு ஆதிபகவன் முதற்று - அதுபோல உலகம் ஆதிபகவனுகிய முதலையுடைத்து. என்றவாறு.

இது தலைமைபற்றிவந்த எடுத்துக்காட்டுவமை. அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி சாதமாத்திரையாகிய இயல்பாற்பிறத்தலானும், ஆதிபகவற்குத் தலைமை செயற்கையுணர்வானன்றி இயற்கையுணர்வான் முற்றுமுணர்தலானுங்கொள்க. தமிழெழுத்திற்கேயன்றி வடவெழுத்திற்கும் முதலாதல் நோக்கி, எழுத்தெல்லாமென்றுர். ஆதிபகவன் என்னுமிருபெயரொட்டுப் பண்புத்தொகையடனுன்முடிபு. உலகென்றது ஈண்டு உயிர்கண்மேனின்றது. காணப்பட்ட உலகத்தாற்காணப்படாத கடவுட்கு உண்மை கூறவேண்டுதலின், ஆதிபகவன்முதற்றேயென உலகின்மேல்வைத்துக் கூறினுர்; கூறினுரேனும் உலகிற்கு முதல் ஆதிபகவன் என்பது கருத்தாகக் கொள்க. ஏகாரம் தேற்றத்தின்கண்வந்தது. இப்பாட்டான்முதற்கடவுள் துண்மைகூறப்பட்டது.

விருத்தியுரை.

இனி எந்நூலையுரைப்பினும் அந்நூற்குப்பாயிர முரைத்து ரைத்தலே மரபாகலான், அஃதுரைக்கற்பாற்று. அப்பாயிரம், பொது

வுஞ்சிறப்புமென இருவகையவாயினும், அவற்றுட் பொதுப்பாயிரம் எல்லாநூன்முகத்தும் வேறுபாடின்றி ஒருபடிததாந் தன்மைத்தாக லின், இலக்கணநூலானுணரப்படு மாகலான் அஃதொழித்து ஏனைச் சிறப்புப்பாயிரமே ஈண்டுரைக்கப்படும்.

அப்பாயிரந்தான், இந்நூலி னுறுப்பேகற்று காலி னுவைக்களத் திருந்துகேட்ட நல்லிசைப்புலவரும், அவர்க்குப்பிற்காலத்திற் சங்க மேறியநல்லிசைப்புலவருட் சிலரும் பாடிய திருவள்ளுவமாலையே யாம்.

அத்திருவள்ளுவமாலைக்குச் சரவணப்பெருமானையர் செய்த வுரையினைக்காண்டிகையாகக்கொண்டு, இந்நூலிறுதியில் விருத்தி யெழுதப்படுமாகலின், ஈண்டைக்கு வேண்டுவமாத்திரையே அத ணுட்கொண்டு ஆக்கியோன்பெயர் முதலாயவற்றைமுறையே கூறப் படும்.

திருத்தகுதெய்வத்திருவள்ளுவனென அசரீரி கூற்றுகவும் வள் ளுவனென நாமகள் கூற்றுகவும் இருபுலவரும், மன்புலவனென் இறையனாரும, நான்முகத்தோன் கூற்றெனக்கொண்டு நான்முகத் தோன் அபினன உக்கிரப் பெருவழுதி முதலாயினாரும்,

வள்ளுவனெனக் கபிலர் முதலாயினரும், வாலறிவினு னென

ப்பரணரு, கானே முழுதுணர்ந்தோ னென நக்கீரனரும், தேவென மாமூலனரும், வள்ளுவரெனச் சித்தலிச் சாத்தனர் முதலா யினரும், முதற்பாவலனென ஆசிரியர் நல்லந்துவனர் முதலாயினரும், தெய்வ மெனக் கோந்தையார் முதலாயினரும், மாதானுபங்கி மறுகி லார் செந்நாப்போதாரென நல்கூர் வேள்வியாரும், பெரு நாவல ரெ னத் தொடித்தலை விழுத்தண்டினரும், திருவள்ளுவரென வெள்ளி வீதியார் முதலாயினரும், பிணக்கிலா வாய்மொழியாரென உருத்தி சன்மகண்ணரும், ஏதமிலரெனப் பெருஞ் சித்தனரும், புலவரெனச் செங்குன்றூர்க் கிழாரும், தேவிற்கிறந்தாரென முதுகூற்றனரும், தேவ னெனச் செயிர்க்காவிரியாற்மகனரும், நாப்புலமையாரெனக் கவுணிய னரும், தெள்ளியாரென மதுரைப் பாலாசிரியனரும் உரைத்தவாற்றுன் ஆக்கியோன்பெயரும் பெருமையு முணரப்படும்; வள்ளுவரோடொ க்க விருக்க வருத்திரசன்மரென்னும், மறற்தேயும் வள்ளுவனென்பா,

முதற்குறள் விருத்தி.

னர் பேதை யெனவும், வல்லாரார்வள்ளுவரல்லா லெனவும், முதற் பாவலரொப்ப வெப்பாவலரினுமில்லெனவும், செந்நாப் போதார் கூடற்கச் செனவும் பிறவு முரைத்த வாற்றுன் அவர் பெருமை யுண ரப்படும்.

முதல் நான்மறை பாடா இடைப் பாரதம் பகர்ந்தோன் பின் வள்ளுவன் வாயதென்வாக்கெனவும், நான் மறைப் பொருளைத்தந் துரைத்த நூலெனவும், சாற்றியபல்கலையும் தப்பாவருமறையும் போற்

றியுரைத்த பொருளெல்லாந தோற்ற வெனவும், வேதப்பொருளாய்ந் மிக விளங்கி யெனவும், வேதப்பொருள் விளங்க வெனவும், பாரதஞ் சாமகதை மனுப்பன்னை மறை நேர்வன வெனவும், தாமேத மைப் பயந்த வேதமெனவும், இன்னானகு முன்பறியச் சொன்ன முது மொழி நூலுள்ள வரிதென் றுலகங்கொள்ள மொழிந்தாரென வும், வேதவிழுப் பொருளே யோதவெனவும், வேதப்பொருளைத்தமி ழாலுரைசெய்தாரெனவு முரைத்தவாற்றான், மறையும் மறைப் பொருளின் முரணுது தோன்றிய பாரதம் சாமகதை மனு அகப் பொருள்நூல் புறப்பொருள்நூல் முதலாய பிறவும் தானே முழுது ணர்ந்து, அவற்றின் வழித்தாகச் செய்தாரென வழியுணரப்படும்.

வையத்தாருள்ளுவ வெல்லா மளந்தாரெனவும், அகலிடத்தோ ரெல்லாந தேர்ந்து தெளியவெனவும், அகிலத்தோருள்ளிருணீக்கு மொளி யெனவும், வானின்று மண்ணின்றளந்ததெனவும் பிறவு முரைத்த வாற்றான் இந்நூற்பொருள் முதனூலாகிய வேதப்பொரு ளேயாகலானும், அம்முதனூல் வானுலகத்தும் வழங்கலானும் நூற் றொருட் கெல்லே இவ்வுலகேயன்றி ஏனையுலகுமா மென்பதூஉம், மும்மலிமுதலாயதாமுடைய மன்னர் தடமுடிமேற் றூன்றே என்ற மையான்நூற் சொற் கெல்லே, வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப் பாய தமிழ் நாடா மென்பதூஉம் உணரப்படும்.

வள்ளுவன் வாயதெனவும், வள்ளுவன் வாய்ச் சொல்லெனவும், முப்பொருளெனவும், குறட்பாவெனவும், குறளெனவும், முப்பாலெ னவும், பொய்யாமொழியெனவும், வாய்மொழியெனவும், பிணக்கிலா மொழியெனவும், வாயுறை வாழ்த்தெனவும், வள்ளுவர் வெண்பாவெ னவும், குறள்வெண்பா வெனவும், வள்ளுவனார்பொருளெனவும், உள்

விருணீக்கும் விளக்கெனவும், உள்ளக்கமல வெங்கதிரெனவும், உள் விருணீக்குமொளியெனவும், வள்ளுவர்பாட்டெனவும் பிறவுமுரைத் தமையான், நூற் பெயரும் பெருமையு முணரப்படும்.

வள்ளுவர்சொல், வள்ளுவர் பாட்டு, வள்ளுவர்பொருளென்றுற் போலப், பிற்காலத்தார் திருவள்ளுவப்பயனெனவும் வழங்குப. தொல்காப் பியந்திரு வள்ளுவர் கோவையார் மூன்றினுமுழங்கு மென்றார் சொற்பற்றி வள்ளுவரென்பது கருத்தனுகு பெயராய் நூலி யுணர்த்து மென்பாருமுளர்; அது பொருந்தாமை தொல்காப்பிய விருத்தியுட்காண்க.

செய்யாமொழிக்கும் பொய்யாமொழிக்கும் பொருளொன்றே யெனவும், ஆரியம் வேதமுடைத்துத் தமிழ் குறட்பாவுடைத் தென வும், நான்முகத்தோன் றந்தநூலெனவும், அந்தாமறைமேலயன்றந் தானெனவும் உரைத்தமையான் நூற்பெருமை யுணரப்படும். பாந்த பொருளெல்லாம் பாரறிய வேறு, தெரிந்து திறந்தோறுஞ் சேரச் சுருங்கிய சொல்லால் விரித்துப் பொருள் விளக்கினரென்றமையா னும், பிறவாற்றானும் சாற்றிய பல்கலியுந் தப்பாவருமறையும்போற் றி யுரைத்த பொருளெல்லாந் தோற்றத் தொகுத் தியாத்தாரென, யாப்புணரப்படும்.

மூப்பாலி னுற்பான் மொழிந்தவ சென்றமையானும், பிறவாற்று னும் நுதலிய பொரு ளறமுதலுன்குமாமென்பதுணரப்படும்.

நற்பலகை யொக்க விருக்க வருத்திரசன்ம சென்றமையானும், வள்ளுவனுர்தம் வாயாற் கேளாதனவெல்லாங் கேட்டு என்றமை யானும், உருத்திரசன்மருஞ் சங்கப்புலவருங் கேட்டா ரெனக்கேட் போருணரப்படும்.

தமிழ்ப் புலவாரய்க் கேட்க வீற்றிருக்கலா மெனவும், உள்ள முருக்கு மெனவும், எப்பொருளும் யாருமியல்பின்றிஉற வெனவும், ஆய்தோறு மூறுமறி வெனவும், இம்மை மறுமையிரண்டு மெழு மைக்குச் செம்மை நெறியிற், றெளிவுபெற மும்மையின் வீடவற்றி னுன்னின் விதிவழங்க வெனவும், உள்ளிருணீக்கு மெனவும், நின்தைக்

முதற்குறள் விருத்தி. ள

இனிய செவிக்கினிய வாய்க்கினிய வந்த விருவினைக்கு மாமருந்து எனவும் பிறவு முரைத்த வாற்றுற், பயனுணரப்படும்.

கடைச் சங்கத்தார்பாடினமையான் அவரதுகாலமென்பதூஉம், உக்கிரப் பெருவழுதியார் பாடினமையான் அவரதுகளனென்பதூஉமு ணரப்படும். "இன்பம் பொருளறம வீடென்னு மிந்நான்கு முன்பறி யச சொன்ன முது மொழிநான்-மன்பதைகட்,குள்ள வரிதென்றவை

வள் ஞவருலகங், கொள்ள மொழிந்தார் குறள்" என்றமையானும் பிறவாற்றானும் காரண முணரப்படும்.

தன்னாசிரியன் முதலாய மூவருளொருவரன்றிப் பிறர்பலர் பாயிரங் கூறினர்; செய்யுளாதலின். குமார தெய்வத்தின் கூருக மணிக்காலதிஞராகிய வணிகமரபிற் றோன்றி, அவையத்துத் தலைவ ராய்க் கேட்ட உருத்திரசன்மர், சாபத்தால் வாய்வாளாமை யுடைய ராகலிற் பாயிரங் கூறிற்றிலர்.

இந்நூல் சங்கத்தாராற் கீழ்க்கணக்கெனக் கொண்டு போற்றப்பட்டது என்னை?

தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கமென மூன்றுசங்க மிரீஇயினர் பாண்டியர்கள்; அவற்றுட் கடைச்சங்க மிருந்து தமி ழாராய்ந்தார், சிறுமேதாவியாரும் சேந்தம் பூதனாரும் அறிவுடையர னாரும் பெருங்குன்றூர்கிழாரும் இளந்திருமாறனும் நல்லந்துவனா ரும் மருதனிளநாகனாரும் நக்கீரனாருமென, இத்தொடக்கத்தார் நாற்பத் தொன்பதின்மரென்ப. அவருள்ளிட்டு, நானூற்று நாற்பத் தொன்பதின்மர் பாடினரென்ப. அவர்களாற் பாடப் பெற்றன, கூத்தும் வரியும் பேரிசையும் சிற்றிசையும் பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும் பதினெண் கீழ்க்கணக்கு மென்றித் தொடக்கத்தன வென்று, களவியலுரைப் பாயிரங் கூறியது கொண்டுணரப்படுமாக லின்;

"நாலடி நான்மணி நானூற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி—மாமூல்
மின்னிலைசொல் சான்சியுட னேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு"

அ திருக்குறட் சண்முக விருத்தியுண்

எனுமாசுவிற் பதினெண் கீழ்க்கணக்கின் முப்பால்சிய குறளொன் றென்பதுணரப்படும்.

இனிக், கணக்கென்பது என்னை யெனின்?

மேல்கீழ்க் கணக்கென விருவகைக் கணக்கே

என்றும்,

மேற்கணக் கெனவுங் கீழ்க்கணக் கெனவும
பாற்படும் வகையிற் பகர்ந்தனர் கொளலே

என்றும்,

அகவலுங் கலிப்பா வும்பரி பாடலும்
பதிற்றைந் தாதி பதிற்றைமப தீறு
மிருத்துடன் றொகுப்பன மேற்கணக் கெனவும்,
வெள்ளைத் தொகையு மவ்வகை யெண்பெறி
னெள்ளற கீழ்க்கணக் கெனனவுங் கொளலே

என்றும்,

ஐம்பது முதலா வைந்நூ றீறு
யெவகைப் பாவும் பொருணெறி மாபிற்
றொகுக்கப் படுவது மேற்கணக் காகும்

என்றும்,

அடிநிமிர் வில்லாச் செய்யுட் டொகுதி
யறம்பொரு ளின்ப மடுக்கி யவ்வத
திறம்பட வுரைப்பது கீழ்க்கணக் காகும
என்னுங் கூற்று மாற்றுனறிக.

இனிக் கீழ்க்கணக்கிற்கு, அவ்வகை பெண் பெறினென்றதல லது இத்துணைத் தென்றுரையாமையாலும், அடிநிமிர் வில்லாச் செய்யுட் டொகுதியென எண்ணின்றி யுரைத்தமையாலும், இனி யவை முதலாயின ஐம்பதிற் குறைந்தும், இருநூல் ஐந்நூற்றின் மிக்கும் வந்தன வென்க.

இதனின்மென் மொழியோற் றுயபதனுவலோடு அடிநிமிர் வின்றிச் செய்யப்பட்ட மையின், அம்மை யெனவும்படும்.

முதற்குறள் விருத்தி

என்னை? "சின்மென் மொழியோற் றுய பதனுவலோ
டம்மை தானே யடிநிமிர் வின்றே" என்றாகலின்.

இனி, முப்பாலெனப் பலர் பெயர் கூறினமையாலும், அறன்தானி யான்ற பொருடரி யின்பு, சிறந்த செய் யென்றமையாலும், இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பாலென முப்பாலுடைத் தென்றுணரப்படும். முப்பாலினுற்பான் மொழிந்தல சென்றும், வீடொன்று பாயிரமொன்றுங் கூறினமையான், எஞ்ஞய வீட்டுப்பா லுங் துறவறமாகிய காரணத்தாலுணருமாறு, அறத்துப் பாலுட் பாயிரத்தினுங் துறவறத்தினுங் கூறப்பட்ட தென்றுணரப்படும்.

ஐயாறு நூறு மதிகாமூன்று மெனவும், ஆயிரத்து முந்நூற்று முப்பதருங்குறளு மெனவும், குறள் வெண்பாவிற் சிறந்திடு முப்பா லெனவுங் கூறுமாற்றான், இந்நூல் நூற்று முப்பத்து மூன்றதிகார மும், ஒவ்வோ ரதிகாரத்துக்குப் பப்பத்தாக, ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள் வெண்பாவு முடைத்தென்றுணரப்படும்.

தொடித்தலை விழுத்தண்டினர் பாட்டால், அறத்துப்பாலான் கியலும், பொருட்பால் எழியலும், காமத்துப்பால் மூன்றியலுமு டைய வெனவும்; எறிச்சலூர் மலாடனர் பாட்டால், பாயிரவியல் நான்கும், இல்லறவியல் இருபதும், துறவறவியல் பதின்மூன்றும், ஊழியல் ஒன்றுமென, அறத்துப்பால் முப்பத்தெட்டதிகாரமுடைத் தெனவும்; போக்கியார் பாட்டால், அரசியல் இருபத்தைந்தும், அமைச்சியல் பத்தும், அரணியல் இரண்டும், பொருளியல் ஒன்றும், படையியலிரண்டும், நட்பியல் பதினேழும், குடியியல் பதின்மூன்று மெனப், பொருட்பால் எழுபததிகார முடைத்தெனவும்; மோசிசே னர் பாட்டால், ஆண்பாற் கூற்றியல் எழும், பெண்பாற் கூற்றியல் பன்னிரண்டும், இருபாற் கூற்றியலாறு மெனக், காமத்துப்பால் இரு பத்தைந்ததிகார முடைத் தெனவு முணரப்படும்.

ஆசிரியர்க்கு முன்பு, அவர் கருத்தணர்ந்து பாடிய நல்லிசைப் புலவருரைத்தன கொள்ளாது, தருமர், மணக்குடியார், தாமத்தர் நச்சர், பரிமேலழகர், பருதி, திருமலையர், மல்லர், கவிப்பெருமான், காளிங்கரென, இந்நாற்றுரை கண்ட பதின்மருட்பலர், தாந்தாம் வேண்டு மாற்றானே பொருட்பாலே முன்றியலினையும், காமத்துப்

பாலே இரண்டியலெனவும், அதனுளே யைந்தியலெனவும் பகுத்தனர் கூறினர். இதுவன்றி ஒவ்வோரதிகாரத்திலும், முறைபடநின்றகுறட் பாக்களையுந், தாந்தாம் வேறு முறை கொண்டு பிறழவைத்தார். அவை யெல்லாம் ஆசிரியர் கருத்தன்றென்க. அப்பதின்மருரையுட் பல விக்காலத்திறந்தன. இருப்பவற்றுட் பரிமேலழகருரையே மிக்கச் சிறப்புடைத்தாகலின், அதனைக் காண்டிகையாகக் கொண்டு, அவ்வுரையுட் பொருந்தாதன மறுத்து, ஏனையவற்றொடு விரிப்பன விரித்து இவ்வுரை யெழுதப்படும்.

'அறத்துப்பால், அறத்தை யுணர்த்தும் பாலென விரியும்.பாலென்பது கூற்பகுதி. பாயிரவியலென்பது, அறதனினது பாயிரத்தினியல்பை யுணர்த்தும் பகுதி. இயல், இயல்பை யுணர்த்தும் பகுதிக்காயினமையின் ஆகுபெயர். அறத்தின்பாயிரமாவது, அறம் இத்தன்மைத்தென்றுணர்தற் கின்றியமையாக் காரணமாய், அதன்பெருமையையறிவிப்பது. வெற்றிக்குக் காரணமான படைச் செருக்கின் பெருமையெனப் பொருள் படுமாறு, பாயிரங்கூறி, படை தொக்காலென்செய்பவென்னுர் பழமொழியினும். அப்பாயிரம் பலவகையவாயினும், ஏனையவுந்தம்முளடங்குஞ் சிறப்புடைய வாய கடவுள் வாழ்த்தும், வான்சிறப்பும், நீத்தார் பெருமையும், அறன்வலியுறுத்தலுமென வின்னே, இந்நூலிற் கூறப்பட்டன. இந்நான்கும் நூற்குப் புறவுரையாகிய பொதுப்பாயிரமுஞ் சிறப்புப் பாயிரமும் போலாது, நூனுதலிய பொருளிலறத்தின் பகுதியாகவே முடிதலிற், பிறாற் கூறப்படாமல் நூலினகத் தவற்றுப்பாக ஆசிரியராற் கூறப்பட்ட

டன.

முதலாவது அதிகாரம் கடவுள் வாழ்த்து என்பது முதலாவதி டமாகிய கடவுள் வாழ்த்தினியல்புணர்த்தும் நூற்பகுப்பென விரி யும். கடவுள் வாழ்த்து, கடவுளை வாழ்த்துதலாகிய ஒழுக்கம்.

கடவுளென்றது-சார்பினுற்றோன்றுது தானருவாயெப்பொருட் குந் சார்பென நின்று, பிறவெல்லாம் கடந்த பொருளை. உள்ளுருதி, இயலுளென்பதன்கட்போல வினைமுதற் பொருளுணர்த்திக், கடந்த பொருளை யுணர்த்திற்று. அதிகாரம்-இடம். அதிகாரக்கட்கு இயல், இயலை மொழியும், இயல்கட்குப், பால் பொது-மொழியுமாக நிற்

றலின், முதலாவது அதிகாரம் கடவுள் வாழ்த்தெனற்று, இந்நூலுள் அறத்தை யுணர்த்து மிடமும், அறத்தின் புருஷியுட் பாயிரியலை யுணர்த்து மிடமும், பாயிரவியலுட் கடவுள் வாழ்த்துணர்த்து மிடமு மாகிய முதலாவதிட மெனப் பொருள் கொள்க.

இந்நூல் முதலிய பொருள் மூன்றனுள், அறம் இம்மை, மறுமை, வீடென மூன்றும் பயத்தற் நிறப்பிற்று, யாவைப் பொரு ளின்பங்கட்குக் காரணமாக நிற்றலின், முன்வைக்கப்பட்டது. ஏனைய அறத்து வழிப்படுஉந் தோற்றத்தவாகலிற் பின் வைக்கப்பட்டன. அவற்றுட் பொருள், இம்மை மறுமையென விரண்டும், இன்பம், இம்மையென ஒன்றும் பயத்தலானும், இன்பத்துக்குப் பொருளுங் காரண மாகலானும், அம்முறையே பொருள் முன்னும் இன்பம் பின்னு

மாயின. அறத்தின் பகுதி நான்கனுள், இல்லறந் துறவற மூழுனவனை முன்று முணர்ற்குப் பாயிரங் காரணமாகலின், அது முன்னும் ஏனைய பின்னுமாயின. பாயிரத்தினதிகார நான்கனுள்:—வான்சிறப்பு முதலாய பிறவற்றுக்குக் கடவுளே காரணமாகலின், அவ்வாழ்த்து முன்னும் ஏனைய பின்னும் வைக்கப்பட்டன.

பரிமேலழகர் உரைப் பாயிரத்தில் அறமாவது மனுமுதலிய நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன வொழிதலுமா மென்று சேனும், அந்நூல் சொல்லியவற்று ளக்காலத்திற் கேலாதன வொழித்துச், சொல்லாத வற்று ளேற்பன கொண்டு, உயர்ந்தோர் பலரு மொழுகிய வாற்று னெழுகு முலக நடையையும், அவ்விதி லிலக்குள் அமைத்துக் கொள்க. இது பரிமேலழகர்க்கு முடன் பாடாதலி, உலகத்தோ டொட்டி என்னுங் குறளி லவருரைத்த வாற்றனறிக.

தேவர்கோட்ட முதலாயவற்றுள்ள பொருளைப் பிறர்தமவென வெளியவழி, அறிந்தோர் அரசற்குணர்த்தும் வழக்குப்போல்வன போறம் விலக்கலாலும் அங்ஙனமுணர்த்தாவழிப் பெருந்தீங்கு விளைத்தலாலும், அவனை முறைகாக்குமுட்டாச் செயினெனவும், அல்லற்பட்டாற்றுதழுதகண்ணீரன்றே செல்வத்தைத் தேய்க்கும் பண்டே யெனவும் கூறினராகலின், 'ஒப்பாரிடியதற்குத்தகவின்றுதவிலியே தண்டம் அறம்விளைத்தலும்; அங்ஙனஞ் செய்யாமை நிற்கு விளைதீ

திருவள்ளுவப்பயனாகவுள்ளும், வழக்குரைத்தண்டமும் உலகொரி நிதத்து நீர்ப்பரப்பதாவதல்லது, ஏழேக்கம்போல மக்களுயிர்க்கு உறுதிபயந்தற்ற சிறப்பில வெனலும், அதனாலவற்றை யொழித்தாரெனலும் பொருத்தமைகாண்க.

இனித் தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் அவற்றைக் கூறக் கண்டிலமெனின், அரசர்துணையின் றியும்நிகழுமொழுக்கமாகிய அறம் போலன்றிவழக்குரைத்தண்டமுமாகிய அறங்கள் அவரது துணைக்கொண் டே நிகழுமியல்பின வாகலின், அவற்றை அறத்துப் பாலுட்கூறாது, ஆசியலும் பிறவியலுங் கூறும் பொருட்பாலுட் சில விதந்தும், பல வுய்த்துணரவும் வைத்துக் கூறினரென்க. இங்ஙனமே ஒழுக்கத்துள் ளும், விரிவஞ்சிப் பலவிதந்து கூறாமல் உய்த்துணர வைத்தார். இவ் வாறு பரிமேலழகரு மிறையிலுரைத்தல் காண்க.

இனித் தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் ஏதப்பட்ட சிறு பான்மையாகிய சிறப்பியல்பு ஒழித்தாரெனலும், பொருந்தாது என்னை? ஒழுக்கமுடைமை முதலாய வதிகாரத்துள்,மறப்பினு மோத்தக் கொளலாகுமென்றாற் போலச் சிலவிதந்தும் சிலவுய்த்துணரவுங் கூறுமாற்றான். இக்கருத்தானன்றே எல்லாப் பொருளுமிதன்பாலு ளிதன்பா லில்லாத வெப்பொருளு மில்லை யென்றார் தமிழ் நாயனரும்.

இனி வழக்குந் தண்டமுமென அவற்றைப் பொருட்பாலுள டக்கலும், நால்வகை நிலையை இன்னிலை, துறவு நிலையென விரண் டாகப் படுத்தலுந் தமிழ் நான் முறை. நூலிய பொருள் வேதப்

பொருளேயாயினும், ஆசிரியர் வடநூல் வழக்குப்பற்றி யோதாது, பெரும்பான்மை தமிழ் வழக்குப் பற்றியே வோதினரென்க. இது வேதப் பொருளை விரிகால் விரித்துலகோ சோதத் தமிழா லுரைசெய் தாரெனவும், "பாத்த பொருளெல்லாம் பாரறிய வேறு தெரிந்து நிறைதோறுஞ் சோச் சுருங்கிய சொல்லால் விரித்துப் பொருள் விளக்கச் சொல்லுதல் வல்லாரார் வள்ளுவரல்லால்" எனவும் கூறு மாற்றாலு முணரப்படும்.

இனி, ஆன்றின்றி யில்லத்தும், அருளின்றித் துறவறத்தும் இக முறைமுறைதும், ஆன்றே மருட்குக் காரணமாதல் அருளென்னு மூன்

முதற்குறள் விருத்தி.

பின் குழனி யென்றமையா லுணரப்படுமாகலானும், துறவறத்திற்கு இல்லறங் காரணமாதல் பெறப்படலின், அக்காரண காரியமுறையால் இல்லற முதற்கட் கூறப்பட்டதன்றிக், கற்புடை மனைவியோடுஞ் செய்யப்படுங் காரணத்தானன்று.

இல்லறந் துணையோடும் வேண்டாது துணையின்றியுஞ் செய்தலின், அக்காரணத்தால் இல்லற முற்கூறப்பட்டதென்றார்க்குத், துணை யோடு செயலினுந் துணையின்றிச் செயலே சிறந்தமையான், துறவ றமே முதற்றுதல் வேண்டும். துணையோடு செயலே சிறந்ததெனின் மூன்றுவதுநிலை துணையோடு செயலு முடைமையானும், அந்நிலை துற வடங்கு மென்பது முயல்வாருளெல்லாந் தலையெனக் கூறுமாற்றா லுணரப்படு மாகலானும், இல்லறத்தோ டொப்பத் துறவறமு முதற்றா தல் செல்லும். இவ்வாற்றான் அதுகாரணமாகாமை யறிக.

இருவகையறமு முறுதற்குக் கடவுளை வாழ்த்துதலாகிய அறமே சிறந்த காரணமாகலின், அவற்றைக் கூறலுற்றார்க்கு முதற்கட் கூறப் படுவது கடவுள் வாழ்த்தன்றிப் பிறிதின்மையின், அம்முறை பற்றிக் கடவுள் வாழ்த்து முற்கூறப்பட்டதன்றி, எடுத்துக் கொண்ட இலக் கியம் இனிது முடிதற் பொருட்டுக் கூறப்பட்டதன்று. கடவுளை வாழ்த்தாவழி ஏனைய அறங்கள் பயன் படாமையைக் கற்றதனாலாய பயனென்னெனவும், மனக்கவலை மாற்றலரி தெனவும், பிறவாழி நீந் தலரி தெனவும், பிறவும் கூறலாமுணர்க.

இவ்வாழ்த்து இலக்கிய முடிதற் பொருட்டுக் கூறப்பட்டதா யின், ஆயெண் பொருளும் வாய்ப்பக் காட்டல் பாயிரத்தியல்பே யென்றதா உமன்றி, ஒரு சாஅசிரியர் சில வேறிலக்கணமும் பெறப்படுமா மூன்னிப் பெயரெனவுங் கூறினராகலின், ஆக்கியோன் பெயர் முத லாய வெட்டேயன்றிப் பிற சில கூறினுங் குற்ற மாகாமையானும், வணக்க மதிகார மென்றிரண்டுஞ் சொல்லச் சிறப்பென்னும் பாயி ரஞ் சேர்ந்தமையானும், கடவுள் வணக்கமுஞ் சிறப்புப் பாயிரமெனப் படுமாகலானும், ஆக்கியோன் பேர் முதலாயின போலன்றிக் கடவுள் வணக்க முதலாய சில ஆக்கியோனாலுங் கூறப்படு மியல்பினவ்க ளின், அவை யெல்லாஞ் சிறப்புப் பாயிரமெனக் கூறப்படுவதினாலானும், அது வுந்தன் பொருட்டுமாதலின் பொருட்டுங் கூறப்படுவதொன்றாதலா

ணும், தலைமைத்துறைப்பாகாது புறவுறுப்பாகலே நிற்றல் வேண்டுமி. அன்னமின்றி அதைத்துறைப்பாகிய அறத்துப்பாலின் மூதற் பகுதி

யாகிய பாயிரவியலின் ஒரு பகுதியாக நின்று, ஏனைய அறங்களுக் கார்த்தும பிற அதிகாரங்கள் போலவே கடவுளை இல்பொருளென் மயங்கலும், இல்பொருளோ உள்பொருளோவென ஐயுறலுமின்றித் தணிதலுங், தணிந்து நினைத்தன் முதலாயின செயலுமாகிய வாழ்த் தின்னையும், வாழ்த்துதலானெய்தும் பயனும், வாழ்த்தா வழிப்படுங் குற்றமு முணர்த்தலின், ஒழுக்க வகையுண் முதன்மைத்தாய அற மாதலுணர்க. பல சமயத்தாருந்தாந்தா முணர்ந்த வாற்றான் வேறு வேறு கொள்ளினும், அப்பொருள் ஒன்றேயன்றிப் பலவின்மையின், இக்கடவுளென ஒருவரைச் சுட்டிச் சிறப்புவகையாற் கூறுதல் நன் றென எப்பாலவரும இயைய மூவரே யன்றிப் பிறதெய்வமாகிநின்ற கடவுளை வாழ்த்தும் ஒழுக்கத்தைப், பொது வகையாலுணர்த்தல் இவ்வாசிரியர் கருத்தென்க.

குணங்களான் மூன்றுகிய வுறுதிப் பொருட்கு அவற்றான் மூவ ராகிய கடவுளோ டியைபுண்டாயினும், அம்மூன்று பொருளையும் பொதுவகையாற் கூறுது, அறம பொரு ளின்பமெனச் சிறப்புவகை யாற் கூறலுற்றார்க கங்ஙனமே அம்மூவரையுஞ் சிறப்புவகையாற் கூறலே முறை. அங்ஙனமின்றி, அம்மூவர்க்கும் பொதுப்படக் கூறி னரெனல் ஆசிரியர் கருத்தாகாமை காண்க.

இலக்கிய முடித்தற் பொருட்டு மங்கல வாழ்த்துக் கூறல் ஆன் றோர் வழக்கேயாதலின், இருலகத்தும் அது வேண்டு மாலெனிற் கனிதான் வழிபடு கடவுளாயாதல், ஏற்புடைக் கடவுளாயாதல், பயன் குறித்தாயினும், இன்றியாயினும், பிறர்க்குப் புலனாகவாது அகத்து வாழ்த்துதலே நியமமாகலானும், அவ்வொழுக்கத்தை மாணாக்கரும் கைடைப்பிடித் தொழுகுமாறு புறத்தே செய்யுளானும் வாழ்த்தல் நிய மந் தப்பலானும், அது தொல்காப்பியனார் செய்யுளான் வாழ்த்

தாமையாதுணைப்படு மாகலானும், நீத்தார் பற்றுவிடத்துப் பற்றற் றுன்யத்தினைப் பற்றலன்றி விடினும் பயன்வேண்டிப்பற்றாகை யின், வள்ளுவனார் இலக்கிய முடிதற் பயன் வேண்டி வாழ்த்தினு மெ தனின் முதற் பெருமைக் கேலாண்மையாதலும், பயன் வேண்டாது வாழ்த் தினும் நன்னூற் றெறுது முன்னோரையாக்கறு மென்னின்

றவத்தான்வரு மென்றாகலின், அரிவலாயினும் பெரியோர்க்கு வரி னின் முடிதல் இயல் பாகலானும், ஆசிரியர் அகத்தியனர், தொல்காப் பியனர் முதலாய அறிவுரைப் போன்றே வள்ளுவனாரும், மதனில் செய்தி மூவகைக் காலமு முடையாராகி அகத்தின்கட் கடவுளை, மூக் காலத்தும் வாழ்த்துமிபல் புடையாராகலானும், இவ்வியல்பு ஒழுக்கவ கையுள் முதன்மைத்தாகக் கொண்டுகூறிய கடவுள்வாழ்த்தநிலைத் தாது முணரப்படு மாகலானும், ஞான பூரண்ராகிய திருவள்ளுவனார், ஆசிரியர் தொல்காப்பியனர்போல இலக்கிய முடிதற் காணமாய மங்கல வாழ்த்தைச் செய்புளாற் கூறுது, அகத்து வாழ்த்தினைனைக் கொள்க. மங்கலவாழ்த்தில்லாவழி நூன் முற்று தென்பது தேற்ற மாகலானும், இந்நூன் முற்றினமையானும், ஆசிரியர் தற்குப் புறம் பாக அகத்தே வாழ்த்தினுரென்பது கொள்ளப்படும்.

இப்பாட்டு என்னுதலிற்றே வெனின், கடவுள் காட்சியாலு மனத்தானுந் தாமேயுணர் பொருளன்மையின், மறை முதலாய னூலுட் கூறப்பட்ட அப்பொருளை, அநுமான அளவையாலுணர்த்தி வலியுறுத்துதல் நுதலிற்றென்பது.

பொருளடை யுவமைக்கு மெய்து மாகலிற், பகவனே யடுத்து நின்ற ஆதியென்னுமடையை, அகரத்தொடுங் கூட்டுக. ஆதி அகரம் —ஆதிபாகிய அகரமென்க. அகரமுதல—அகரமாகிய காரணதனை யுடையவென்க. எழுத்தெல்லாம்-எழுத்தின் வகைகளெல்லா மென்க. எழுத்தென்தொழிற் பெயர், அஃ தெழுதப் படுமியல்பினவாய ஒலி வடிவையும்,வரிவடிவையு முணர்த்தலின் ஆகுபெயர். அது பால்பகா வஃறிணைப் பெயராதலின், ஈண்டு அதன்வகைகளாகிய பன்மையை யுணர்த்திற்று. ஆதி பகவன் முதற்று—ஆதி பகவனாகிய காரணத் தை யுணர்த்திற் றென்க. முதல்—காரணம். அஃது அஃறிணையுட் பன்மையாலும் ஒருமை யாலும் முதல வென்றும், முதற் றென் றும் ஆயிற்று.உலகென்பது உயிரும் உயிரல்பொருளுமென இருபாற் றாகிய பிரபஞ்சத் தொகுதி. ஆதி அகாமாவது அகாவுயிர்க்கும் உயி ராய்ச் செவியிற் கேட்கப்படுதலு மெழுதப்படுதலு மின்றி,-ஈதை. ஈ த்திசையான் அகத்திசைக்கு மொலி, அகாமாவது செவியிற் கேட்கப் படுதலு மெழுதப்படுதலு முடைய புறத்திசைக்கு மொலி. எழுத்தின தன்மை தமிழோரன்றி வடமொழி முதலாய பிறமொழிகளிலுங்

திருக்குறட் சண்முக விருத்தியுண்

செவியிற்கேட்குமாறு புறத்திசைத்து வழங்கும் அகர முதலாயவெழுத் துக்களை.

இங்ஙன மொலியிருவகை யாதலை ஆசிரியர் தொல்காப் பியனார்.

"அகத்தெழு வளியிசை யரீறப நாடி
யளபிற் கோட லந்தணர் மறைத்தே

யஃதிவ ணுவலா தெழுத்து புறத் திசைக்கு
மெய்தெரி வளியிசை யளபுநவன் றிசினே".

எனக் கூறுமாற்றுணர்க.

ஆக்கப்படுவன வெல்லாந் தோன்றி நின்றழியுமியல்பின வாகலிற், புறத்திசைத்தலா னெழுதப்படுவனவாய், எழுத்துக்களுங் காணப்படுதலாற் சுட்டப்படுவதாய், உலகந்தோன்றி நின்றழியுமியல் பினவென்பது பெறப்பட்டது.

பின்னர் எழுத்தென்று காரணப்பெயர் கூறியாங்கு, முன்னரு மகாவெழுத்தென்னுமல் அகரமெனக் கூறினமையாலும், பொருட்குக் கூறினமைபாற் கொள்ளப்பட்ட ஆதியென்னுமடை யாலும், புறத்தினிசைத்துக் கேட்கப்படுதலு மெழுதப்படுதலுமுடைய அகரவுயிரையுணர்த்தாமல், அவ்வுயிர்க்கு முயிராய் அகத்திசைத்துக் கேட்கப்படாமலு மெழுதப்படாமலு நின்ற நாதமாகிய அகரத்தை யுணர்த்திற்று. அகரம், நாதத்திற்கே யன்றி அகாவுயிர்க்கும் பெயராகலின், அகரத்தை அகத்திசைக்கு நாதமெனக் கொள்ளாது புறத்திசைக்கும் அகரவுயிரை முதலாக வுடையன வென்றும், இப்பாட்டுத் தமிழாதலிற் றமிழெழுத்தே அகரத்தை முதலாக வுடையன வென்றும், அகரம் ஓவிவடிவிற்கே காரணமாதலன்றி வரிவடிவிற்குக்காரணமாகாதென்றும் பொருள் கோடலுங் கூடுமாகலின், அங்ஙனங் கொள்ளாமற் புறத்திசைக்கும அகரவெழுத்தும் தமிழெழுத்தேயன்றி, வடவெழுத்தும பிறவெழுத்தும் வரிவடி வெழுத்துங் கோடற் பொருட்டு எழுத்து அகரமுதலவெனினும், அதன்பன்மை யறியப் படுமாயினும், அங்ஙனங் கூறாமல் எழுத்தெல்லாமென்று விதந்து கூறினார்.

எழுத்தெல்லா மென்றுற்போல உலகெல்லாமெனக் கூறின், உயர்திணையும் உயர்திணையும் இடமுமென அவற்றுளொன்றனது பன்

மையே யெஞ்சாதுணர்த்தலின், அங்ஙனங்கூறுமல் உயிரும் உயிரல் பொருளுமென விரண்டனது தொகுதி யெல்லாவற்றையு முணர்த்து மியல்பிற்றுதலின், உலகென ஒருமையாற் கூறினர்.

கடவுளது அளவில் பெயர்களுட் பிறகூறுது உலகந் தோன்று தற்கு அவன் குணங்கள் பலவற்றுள் ஈச்சுரத்தன்மை முதலாய ஆறுகுணங்களுமின்றி யமையாக்காரண மாகலின், அவற்றை யுணர்ந்தற் பொருட்டு அக்குணங்கட்குப் பொதுப்பெயராகிய பக மென்னு முதனிலை புணர்த்துப் பகவ னெனக் கூறினர். கடவுளருள் பெற்றிருரும் அக்குண முடையாராதலின், அவரும் அப்பெயருக் குரிய ராதலாக கருதி, அவரையிலக்கற் பொருட்டு ஆதிபகவனென்றார்.

ஆதிபகவ னெனற்குத் தனக் கோராதியின்றி உலகிற்கு ஆதி யாய் நின்ற பகவனெனப் பொருள் கொள்க. நிலையுடைப் பொருளா கிய ஆதிபகவனும நிலையில் பொருளாகிய உலகுமென இவ்விரண் டன்றிப் பொருள் பிரிதின்மையாலும், இவ்விரண்டனுள் உலகிற்கு ஆதிபகவனெனவே, பகவனுக்காதி பிறிதொன்றில்லை யென்பது தானேபோதரும். பதி, பசு, பாசமெனப் பொருள் மூன்றெனிற் பசுபாசமிரண்டு முலகெனப்படலின் அமையுமென்க. அகத்திசைக் கும் அகாமுமூவகைநிலையான் முத்திறப்படலின், ஆதி அகா

மெனற்கு அம்மூன்றனுள்ளு முதலாவதாகிய அகாமெனப்பொருளு ரைத்துக்கொள்க.

உவமைத்தன்மையைப் பொருளுக்குங் கோடல் வழக்காறுத லானும், நாதமாகிய அகாம் அருவமாதலானும், அருவமாகிய ஆதி பகவனென விரித்துரைத்துக்கொள்க.

உலகுகாரணமுடைத்தன்றென்பார்க்கு, இவ்வேதுக்களாற் காரணமுடையதே யெனவுங், காரணமுடைத்தாயினும் பகவன் காரணமாகானென்பார்க்கு இவ்விவ்வேதுக்களான் அவனே காரணமெனவுந் துணிதற்பொருட்டும், அவன்காரணனாயினும் அவற்குத்துணையாகப் பிறகாரணமும் வேண்டுமென்பார்க்கு, இவ்விவ்வேதுக்களாற் பிறகாரணங்கள் வேண்டா பகவனேகாரணமெனப் பிரித்தற்பொருட்டும் கூறினாராகலின், முதற்றேயென்பதன்கண் ஏகாம் தேற்றமும், பிரிநிலையுமாமெனக்கொள்க.

§

கீஇ திருக்குறட் சண்முக விருத்தியுண்

உலகு பகவனுகிய காரணத்தையுடையதே: காரியமாதலின். யாது யாது காரியமெனப்படுவது அது அது காரணமுடைத்து. எழுத்துக்களாகிய காரியம் எழுதப்படாத அகாரமாகிய காரணத்தை யுடையவாயினாற்போல என, மேற்கோளும் எதுவும் எடுத்துக்காட்டுவமையுணர்த்தலின் இதுபிறர்பொருட்டனுமானமாம். புகைகாரியமாதலின் அனலாகிகாரணத்தை யுடைத்தென்றாற்போல உலகதாற்பகவனுண்டென உணர்த்தலின், ஆதிபகவனென்னுங் காரணந் துணிபொருளெனப்படுஞ் சாத்தியமாம். உலகந்துணிபொருட் கிட

மாகிய பக்கமாம். பக்கமாகிய உலகு சாத்தியமாகிய காரணத்தை யுடைத்தென்பது மேற்கோள். சொல்வோன் கேட்போனென இரு வாலும் மறியப்பட்ட உலகு, சொல்வோனுலறியப்பட்டுக் கேட்போ னுலறியப்படாததாகிய காரணமுடைத்தென்றும், விசேடணம் பெற்றமையிற், பக்கமாயிற்று. மூன்றுணர்வின்றெனினும் ஏதுவாற் பின்றுணர்பொருளே சாத்தியமாதலின். ஈண்டு முதலென்பது சாத் தியமாயிற்று.

காரியப்பொருளாகலினென்பது ஏது. உலகென்பது நிலந் தீ நீர் வளி விசும்போடைந்தும் கலந்தமயக்கமாதலின் அம்மயக்கங்காரண மின்றியுளதாகாமையாலும், முதற்றேறையென்னுந்தேற்றத்தாலும்,காரி யமாதலினென்பது உய்த்துணரப்படுமாகலின், அவ்வேதுவைவிதந்து கூறுமற்சுருங்கிய சொல்லாற் பொருள் விளங்கக்கூறினர். எழுத்தெல் லாம் அகாமுதலவென்பது எடுத்துக்காட்டு.

இத்திட்டாந்தத்திற்காரணத்தானன்றி யியங்காமையாவாரு மறியப்படலின் எழுத்துக்கள் சபக்கமாம். திட்டாந்தத்தின் உறுப் பாகலின் யாது யாது காரியமெனப்படும் அது அதுகாரணமுடைத் தென்பது வியாத்திவாசகம். இதுவுமுய்த்துணரப்படுமாகலின் விதந் தகூறிற்றிலர். செய்யுளாதலிற் போலவென்னுமுருபுதொக்கது. தனி யிபொருளில்லா நிலைக்களன்விபக்கமெனப்படுமாகலின், ஈண்டுத்தனக் யொருகாரணமில்லாக் கடவுளொப்பியாயவைசேடிகர் முதலாயி னோர்தாம் நித்தமெனக்கொண்ட பொருளைக்காரணமில் பொருளென் றுரைத்தாயினும், அஃதெல்லார்க்கு முடன்பாடன்மையின், விபக்கத்தை யிதாரணமாக்கற்கு சபக்கமாகிய எழுத்துக்களையுவமை கூறினர். இது

சாதன்மிய திட்டாந்தமெனப்படும். விபக்கம் உதாரணமாகவரின் வைதன்மிய திட்டாந்தமாம்.

இம் மூன்றுப்பொடு உபயதிகமன மென விரண்டுங் கூட்டி ஐந்துறுப்புக் கூறுவாருமுளர்; அவையிரண்டும் எடுத்துக்காட்டுள டங்கும். ஒட்டிய உபயதிகமன மிரண்டுந் திட்டாந்தத்திலே சென் றடங்கு மென்றார் கூலவாணிகன் சாத்தனாரும்.

அனுமான மூவ்கைப்படும்; பூருவக்காட்சியனுமானமுங் கருத லனுமானமும் உரையனுமானமுமென. அவற்றுளிஃதுரையனுமா னம்; கடவுள் காட்சிப்பொருளுங்கருத்துப் பொருளுமாகாமல் உரை யளவையாற் கொண்ட பொருளாகலின்.

இனிச் சொல்லோன்றான் கூறும் பக்கத்தினுங் கேட்போன் பிறிதொருபக்கத்தினுமுணர்ந்த பொருளே சாத்தியமாதல் வேண்டு மாதலானும, ஈண்டுச்சாத்தியமாகிய பகவன் சொல்லோர்க் குணர் பொருளாய்க் கேட்போரில் உரையளவை கொள்ளாதார்க் குணர் பொருளாகாமைபானும, பகவன் முதற்றேயுலகென்பது அப்பிரசித்த விசேடணமென்னும் பக்கப்போலியாகுமெனிற் பகவனையுடைத் தென்னுது பகவனுகிய காரணத்தை யுடைத்தென்றாகலிற் பகவ னுகிய சாத்திய விசேடம் காரணமாகிய சாத்தியப் பொதுமையை விசேடித்து நிற்றலானும், அக்காரணந்தான்யாவராலுங் காரியமுள் வழிக் கண்டபிரசித்த விசேடணமாகலானும், அங்ஙனமாகா தென்க. அற்றாயின் உலகு முதற்றெனலேயமையு மெனின், உரைய

ளவை கொண்டார்க்குக் கேள்வியாற் பகவனுணர் பொருளாதல் பற்றி அவர்காரணமுடைத்தெனப் பொதுவகையாற் கொளலே யன்றி இக்காரணமுடைத்தெனச் சிறப்புவகையானுங் துணியுமாறு பகவன் முதற்றே யென்றார். அப்பிரசித்தம்= அறியப்படாதது.

உலகமாகிய தொகுதி, இன்னகாலத்துத் தோன்றிற்று, இன்ன காலத்து அழிந்ததென்று ஒருவராலுங் காணப்படாது நிற்றலின், அஃது அழிவுபாடுடைய காரியமன்று; நித்தமே யெனக்கூறுஞ் சமையக்கணக்கரு முண்மையின், அவர்க்கிவ்வேது அந்தியதாசித்த மென்றும் ஏதுப்போலியாகுமெனின் அவர் உலகத்தொகுதி காரிய மாதலைக் காணாராயினும் அதன் பகுப்புக்கள் காரியமாதலை யுணர்ந்

ஊஉ திருக்குறட் சண்முக விருத்தியுண்

தாராகலானும், அவைகாரியமாயின், அவற்றை யுறுப்பாகவுடைய உலகும் காரியமாதல் சொல்லாதேயமையு மாகலானும், அக்குற்ற மின்று. அந்தியதான்= இருவரில் ஒருவன். அசித்தம்= உள்ள தென்று கொள்ளப்படாதது.

உலகு தானே தோன்றி யழியு மியல்பிற் றாகலானும் அது சான்ற பூதங்களின் கூட்டமாகலின் அவையே தம்மு ளொன்றனை யொன்று தோற்றி நிறுத்தி யழிக்கு மாகலானும், பிறிதொருகாண முடைத்தென லமையாதெனக் கூறுவாரு முண்மையின், அவர் கூறுங் கடாவை யாசங்கித்துக் காரணமுடைத்தென்று மேற்கோளை வலி யுறுத்தற் பொருட்டு முதற்றே யெனத் தேற்றக் கூறி யழுத் துக்களை யாவருங் காரியப் பொருளென்றே கோடலின், ஆண்டு முத லிவென வகாரமின்றிக் கூறினர். மாறுபட்ட இருதன்மையொரு

பொருட்கண் இயல்பினுளவாகாமையானும், நீரிற் குடுகாண்பின் அதனை யியல்பெனக் கொள்ளாது செயற்கை யெனவே கோடலா னும், தோற்றமும் அழிவுந் தம்முள் ஒன்றற் கொன்று மாறுபா டுடையவாகலின் அவற்றி லொன்றைக் காரணமின்றெனக் கொள்ளி னுமற்றொன்றைக் காரணமுடைத்தெனவே கோடல் வேண்டு மாக லானும், உலகு காரணமுடைத்தெனல் பெறப்படு மெனவும், பூதங் கள் தம்முள் ஒன்றற் கொன்று காரணமெனின் அவை நான்குந் தோற்றமும் அழிவுமுடைய வாகலின், தோற்றமும் அழிவு மில்லாத பிறிதொன்றே காரணமாதலுமையுமன்றி அவைதாமே யொன்றற் கொன்று காரணமாகாவெனவும் பிறவுங் கூறி, மேற்கோளை வலியுறு த்தற் பொருட்டுத் தேற்றப்பொருளை விரித்துக்கொள்க.

உலகத் தோற்றத்திற்குக் காலமுதலாய காரணங் கூறுவாரு முண்மையின், அவர்கூறுங் கடாவை யாசங்கித்துச் சேதனமும் அசேதனமுமாகிய இவ்வுலகிற்கு, அசேதனங் காரண மாதலுமையா தென்று மேற்கோளை வலியுறுத்தற் பொருட்டு அவன் அவள் அது வென்று சுட்டப் படாத கடவுளைப் பகவனென உயர்திணையாற் கூறி னார்.

உலகம் பெரிதாகலின் அதனையாக்கல் ஒருவாலுமையாது பலர் வேண்டு மென்பாரு முண்மையின், அதனையாசங்கித்துக் கடவுட்கு

மூதற்குறள் விருத்தி. உங

அளவிலாற்ற லுண்மையிற் சாது மென்று மேற்கோளைவலியுறுத் தற் பொருட்டுப் பன்மை சுருமல் உயர்திணை யுள்ளும் ஒரு

மையாற் கூறினர்.

கடவுள் சேதனமாயினும், மனமுதலாய கருவியொடு கூடியே யறியு மென்பாரு முண்மையின், அதனைபாசங்கித்து என்பும நரம் பும் மூளையும் அறிவுமென்பனி ஆண்பாற்கூறும், தோலுந் தசையு மிரத்தமு மென்பனபெண்பாற் கூறு மாகலானும், பிருங்கி முனிவர்க் குப் பெண்பாற் கூறுசங்கிய வழியும் அறிவு குன்றுமையாலும், ஆண் பாற் கூறின்றிப் பெண் மகளறிதலெனல் காட்சியானுங் கருதலா னுமேயன்றி யுரையாலு மறியப்படாமையானும், பெண்பாற் கூற் றொடு கூடாவழியு மாண்பாலறிதலும, ஆண்பாற் கூற்றொடு கூடினன் றிப் பெண்பாலறியாமையு முணரப்படலிற் கடவுளும் தான் உலகெ

லா மாகிய நிலையினும உலகுடனுகிய நிலையினும அறிதல் போலவே, உலகிற்கு வேறுகிய நிலையினுங் கருவியின்றித் தானே யறிதல் சுதந் தரத் தன்மைபா லமையு மென்றுணர்த்தற்பொருட்டும், கடவுள் விளையாட்டானே உலகத்தைத் தோற்றிக் காத்தழிக்கு மென்பாரு முண்மையான் அதனையாசங்கித்து விளையாட்டாலெரு தொழிலை

மேற்கோடல் பெண்மை யறிவிற்கியல்த லன்றி யாண்மை பறிவிற் கியல் பன்மையின், உயிர்களது உள்ளிருளீக்கியாளுந் தன்மைகாண மாக அத்தொழில்கள் நிகழுமன்றி, விளையாட்டாலுவன வலல வென் றுணர்த்தற் பொருட்டும், உயர்திணை யொருமையுள்ளும் பெண் பாலாற்கூறுது ஆண்பாலாற் கூறினர். விளையாட்டால் நிகழுமெனவு நூல் கூறிற்றுண்டே யெனின், அது கடவுளதாற்றலை நோக்கின் அத்தொழிலரியன வல்ல எளியவே யென்னுங்கருத்தானன்றிப் பய னின்மைக கருத்தானன்று.

இருடிகளுட்சிலர் உலகு படைத்தாரெனநூல் கூறலான் அவ

ருங் காரணமாதல் செல்லு மாகலின், அதனையாசங்கித்து அவர் உல
குபடைப்பினும் இயற்கையினன்றிக் கடவுளருள் பெற்றே படைத்
தலானும், அவர் தோற்றத்திற்குங் கடவுளே காரணமாதலானும்,
அவர்காரணமாகார்; அவர்க்குமாதியாகிய கடவுளே காரணமென
மேற் கோளை வலியுறுத்தற் பொருட்டு ஆதி யென்றார்.

ஆக திருக்குறட் சண்முக விருத்தியுண்

உலகிற்குப் பகவன் காரணமென நான்கனுருபாற் கூறிற்
பொருளினிது விளங்கவும் அவ்வாறு கூறுது எழுவாயாற் கூறிய
தென்னையோவெனின் நான்கனுருபு அதற்கு வினையுடைமை முதலா
கப்பல பொருளுடைத்தாய் அவற்றுள் யாதானு மொன்றே
யுணர்த்து மியல்பிற்றாகலின் அவ்வுருபு கடிசூத்திரத்திற்குப்
பொன்னென்புழிப்போலக் காத்தற்கே காரணமெனப்பட்டு அதற்
குபகாரமாகவேனும் பிணிக்கு மருந்தென்புழிப்போல அழித்
தற் காரணமெனபபட்டு அதற்குப் பிறிதாகவேனும் பொருள்
படக்குமன்றி, ஆக்கல் காத்தல் அழித்தலென முத்தொழிற்
கும் காரணமாதலை யுணர்த்தாமையானும், முதற்றென்பது
குறிப்புவினைப் பயனிலையாகலின், எவ்வினையும எதுமுதலாயின
வின்றி யுளதாகாமையான் முத்தொழிற் படலமெனன எதுவருவித்
தல் கூடுமாகலானும், நான்கனுருபாற் கூறுமல் உலகு ஆதிபகவன்
முதறறேயென எழுவாயாற் கூறினர்.

இங்ஙனம் பக்கமாகிய உலகு எழுவாயாற் கூறப்படவே எழுத்
தக்கள் சபக்கமாதலின் அவையு மெழுத்தெல்லா மகாமுதலவென

எழுவாபாற் கூற வின்றியமையாதாயிற்று.

உலகைப் பகுததுக் காண்புழி அப்பகுப்பிற்குப் பகவனுகிய காரணத்தொடு காலமுதலாய பிறவுங் காரணமாதல் பெறப்படலின், அக்கால முதலாய பிறவெல்லாம் உலகெனப்படும் பிண்டத்தின் ஏகதேசத்திற்கன்றி முழுமைக்குங் காரண மாகாமையானும், பகுப் பிற்கே யன்றி பிண்டததிற்கும் ஆதிபகவன் ஒருவனே காரணமாக லானும், சேதனமும் அசேதனமுமென இருபாற்றுகிய உலகெனப் பகுப்புத் தோன்றக் கூறிப்பிரகாரணமுங் கூறுமை குன்றக் கூறலாக முடியுமாகலானும், பிண்டத்திற்காவது பகுப்பிற்கு மாதல் சொல் லாதே யமையுமாகலானும், உலகெனப் பிண்டமே கூறினர்.

எழுத்துக்களைப் பகுத்துக் காண்புழிப் பல்லு மிதழும் முதலாய வும் பிறவுங்காரணமாதல் பெறப்படலானும், பன்முதலாய பிறவெல் லாம் அப்புகுப்பைத் தொகுத்துக் காண்புழி அதனைக தேசத்திற் தன்றி முழுமைக்குங் காரணமாகாமையானும், உற்றி முதலாமுன்று

னி எழுத்தின் றொகுதிக்குஞ் பகுதிக்கும் காரணமாயினும் விரவடி வாகிய எழுத்துக்களின் றொகுதிக்காவது ஏகதேசத்திற்கன்று காரணமாகாமையானும், வரிவடிவும் எழுத்தே யாகலானும், அகாமாகிய நாதம் ஒலிவடிவாய எழுத்துக்களைத் தனித்தனிக் காண்புழியும்

தொகுத்துக் காண்புழியுங் காரணமாதல் போலவே அவ்வொலி வடிவைப் புறத்துய்ப்பதாகிய வளிக்கும் வரிவடிவிற்குங் காரணமாக நிற்றலானும், ஆசிரியர் தொல்காப்பியனார் தனித்தனிக காரணங் கூறுங் கருத்தால் "எல்லா வெழுத்துஞ் சொல்லுங் காலைப் பிறப்பி னாக்கம் வேறு வேறியல" வென்றாற்போல் ஈண்டும் எல்லாவெழுத்துங் அகர முதல வெனக்கூறின் அவை பிண்டமாகாது தனிதனிப் பருக்கும் பிறப்பும் பன்மைபாகவே முடிதலிற் பிறகாரணங் கூறுமை குன்றக்கூறலாக முடியுமாகலானும், எழுத்தெல்லாமெனிற் பிண்டமாகக் கொள்ளப்படுமாகலிற் பிண்டத்திற்காகிய காரணம் பகுப்பிற்குஞ் சொல்லாதே யமையுமாகலானும, எழுத்தெல்லாமெனப் பிண்டமே கூறினார். எல்லாவெழுத்து மெனிற் பன்மைபாதலின்றிப் பிண்டமாகாமையும்,எழுத்தெல்லாமென்பது பன்மைபாதலாடு பிண்டமாதலும், தொல்காப்பிய முதலாய நூல் வழக்காலுணர்க.

நாதமாகிய ஓசையினின்று விசும்பும், விசும்பினின்று வளியு மூளவாதல் நூற்றுணிபாகலின், உந்தி முதலாமுந்து வளிக்கும் நாதங் காரணமாதல் காண்க.

நாதம் புறத்திசைப்பதன்றி யுணர்வுமாத்திரையா னுண்மை யானும், வரிவடிவின்கட்புறத்தொலி யின்றெனினும் சிததிர முத்தியி வெழுத்துப்போல ஒலியுணர்த்தாமையும் நந்துழுத விரேகைபோலப் பொருளுணர்த்தாமையுமின்றி அவ்வரிவடிவாய எழுத்து, ஒலிவடிவாய எழுத்தையும் பொருளோடு மூணர்த்தலின், அவ்வுணர்வு நாதமன்றி யுளதாகாமையானும், நாதம் வரிவடிவிற்குங் காரணமாதலறிக.

கடவுளது குணங்கள் அளவிலவாயினும் நூல் ஆறுகுணமெனவும், முக்குணமெனவும், எண்குணமெனவு மொவ்வோராற்றாற்

திருக்குறட் சண்முக விருத்தியுண்

அறிவு இன்பமென்ற முக்குணத்தின் உண்மையும், பகவனென் உயர்திணையாற் கூறலான் அறிவும், இப்பாட்டாற் பெறப்பட்டன. ஏனைய பிற்கூறுப. அறுகுணங் கடவுளுக்கியற்கையும் அவனருள் பெற்றார்க்குச் செயற்கையுமாதல் ஆதியென்றதாற் பெறப்பட்டது. முக்குணமுயிர்க்கு மூலவாயினுங் கடவுளதுண்மையாண்டு மொரு தன்மைத்தாதலும் உயிரதுண்மை உடலொடுதோன்றி மறைதலு மாகிய வேறுபாடுடைய வென்பது, கடவுள் காரணம உலகுகாரிய மென்றதனாற் பெறப்பட்டது.

அறிவின்பங்களின் வேறுபாடு பின்வருங் குறளாலுணரப்படும்.